**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண் – 45/2009**

**CNR No:TNAL05000035-2009**

குஞ்சு படையாட்சி, – வாதி

/எதிர்/

1. அண்ணாமலை,
2. தமிழக அரசு அதன் பிரதிநிதியாக அதன் மாவட்ட ஆட்சியர்,
அரியலூர்,
3. வட்டாட்சியர், ஜெயங்கொண்டம்.
4. கோட்டாட்சியர், உடையார்பாளையம். – பிரதிவாதிகள்

வாதிக்கு தாவா சொத்து உரிமையானது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக தாவா சொத்தை வாதி நிம்மதியாக அனுபவம் செய்து வருவதை 1–ம் பிரதிவாதியோ அவரின் வாரிசுகளோ, உறவினர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவிளதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சர்வே எண் 117/21க்குரிய வாதியின் பட்டா எண் 687லும் இதர சம்பந்தப்பட்ட ரெவின்யூ ஆதிரவுகளில் 1–ம் பிரதிவாதியின் பெயரை கூட்டு பட்டாதாரராக சேர்த்துள்ளதை நீக்கியும், மாற்றம் செய்ய 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்து கோரும் உறுத்துக் கட்டளை வழங்கியும், தாவா செலவுத் தொகையினை கட்சியாடும் பிரதிவாதிகளை வாதிக்கு கொடுக்கச் சொல்லி உத்திரவு செய்தும், இன்னும் இந்த வழக்கின் சூழ்நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ற இதர பரிகாரங்களை வாதிக்கு வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

இவ்வழக்கானது 05.10.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார், அவர்கள் முன்னிலையாகாமலும்,1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன், அவர்கள் முன்னிலையாகமலும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகாமலும், 5 முதல் 7 பிரதிவாதிகள் வக்காலத்து தாக்கல் செய்யாததால், தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை

பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை, வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், இன்று இவ்வழக்கு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது, இவ்வழக்கு நீண்ட காலமாக நிலுவையிலிருந்துவரும் வழக்குகளின் பிரிவில் வரும் நிலையில் வாதி விசாரணையைத் தொடங்க முன்வரவில்லை, எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

**வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.45/2009
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 05.10.2023